DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 467/2024

Miscellaneous :

Deposition of Witness for : DW –2

**எதிரி ஆஜர்**

| Name | சாமிநாதன் |
|---|---|
| Father / Husband Name | பரசுராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.03.2026**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுராந்தகம் செல்லியம்மன் தேரடி தெருவில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரி ஆகிய இருவரையுமே தெரியும். புகார்தாரர் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ரவி என்பவர் காசோலை மோசடி செய்துள்ளதாக புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் ஏற்கெனவே மதிமுக கட்சியில் நகர செயலாளராக இருந்தேன் என்றால் சரிதான். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இருந்தேன். தற்போது திமுக கட்சியில் உள்ளேன் என்றால் இல்லை. புகார்தாரருடன் நான் சுமார் 15 நபர்களுடன் எதிரி ரவி வீட்டிற்கு சென்று அவரை பணம் கேட்டு மிரட்டினோம் என்றால் சரியல்ல. நான் மிரட்டியதில் தான் எதிரி Ex.P1 புரோனோட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

2. மேற்படி விவரங்கள் அனைத்தும் கேமராவில் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்பட்ட வீடியோவில் கருப்பு மற்றும் சிவப்பு நிறத்தில் கட்டம்போட்ட சட்டை அணிந்திருந்த நபர் நான் தான். அந்த வீடியோவில் கண்ட இடம் ஆஜர் எதிரியின் அலுவலகம் என்றால் சரிதான். எப்போது நாங்கள் எதிரியின் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் 2024 ம் ஆண்டு பணம் கொடுக்கிறோம், வாங்கள் என்று சொன்னார், அப்போது சென்றோம். அந்த வீடியோவில் சேரில் உட்கார்ந்து இருக்கும் நபர் புகார்தாரர் என்றால் சரிதான். எங்களுடன் யார் யார் வந்தார்கள் என்றால் ரஞ்சித், அய்யனார், நாகராஜன் என்கிற நாகூர் ஆகியோர் சென்றோம். யார் சொல்லி எதிரியின் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் ரவி சொல்லி தான் சென்றோம். நான் சொல்வது தவறு என்றாலும், ரவி அவரது அலுவலகத்திற்கு எங்களை அழைக்கவில்லை என்றால் சரியல்ல.

3. புகார்தாரர் தான் பணத்தை வாங்கிதரச்சொல்லி எங்களை கட்டப்பஞ்சாயத்திற்கு அழைத்தார் என்றாலும், என்னுயை வற்புறுத்தலில் தான் எதிரி Ex.P1 கையொப்பம் செய்தார் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி

எப்போது, எதற்காக புகார்தாரரிடம் கொடுத்தார் என்றால் எப்போது கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் வாங்கிய கடனுக்காக கொடுத்தார்.

4. நாங்கள் அவரது அலுவலகத்திற்கு செல்வதற்கு முன்பே காசோலையை கொடுத்தார். அந்த காசோலையை எவ்வளவு நாட்களுக்கு முன்பு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எதிரியிடம் புகார்தாரர் சீட்டு சேர்ந்திருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரமும் தெரியும் என்றாலும், தெரிந்துக்கொண்டுதான் பஞ்சாயத்திற்கு சென்றேன் என்றாலும், அனைத்து விவரமும் தெரிந்துக்கொண்டே புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**5.** எதிரி அவரது மனைவியுடன் புகார்தாரர் வீட்டிற்கு வந்து சத்தம்போட்ட பிறகு தான் இருதரப்பினருக்கும் இடைய உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி தெரியும் என்றால் சரிதான். எதிரி புகார்தாரருக்கு ரூபாய் 10 லட்சம் கொடுக்கவேண்டும். எதிரி புகார்தாரர் வீட்டிற்கு வந்த பிறகு தான் பணம் தருவதாக சொல்லி என்னை அவர் வீட்டிற்கு வரச்சொன்னார். நான் ரவி சொல்லி தான் அவர் அலுவலகத்திற்கு சென்றேன். ரவி வீடியோ எடுப்பது தெரிந்து தான் வீடியோ எடுக்க சொன்னேன். நாங்கள் சென்றபோது ரவியும் அவரது மனைவியும் அதிக அவதூரான வார்த்தைகளை பேசி செல்வம் என்பவரை கரண்டியால் அடிக்க வந்தார், அதை நான் தடுத்தேன். ரவி வீட்டிற்கு செல்லும்போது அவர் காசோலை கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

6. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் காசோலை கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி முன்பே காசோலை கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.